**Source:** *Tamil Murasu*, p4
**Date:** 12 October 2017

# துப்புரவில் பெரும்பாலானவர்கள் மனநிறைவு; நிகழ்ச்சிகளுக்குப் பிறகு அங்காடி நிலைய துப்புரவு குறைவு என பலர் கருத்து

சிங்கப்பூரில் பொது இடங்களின் துப்புரவு மனநிறைவு தரும்படி இருப்பதாக 10 பேரில் ஏறக்குறைய ஒன்பது பேர் கருதுகிறார்கள் என ஓர் ஆய்வு தெரிவிக்கிறது.

இருந்தாலும் வீடமைப்பு வளர்ச்சிக் கழக நகர மையங்கள் முதல் ஈரச் சந்தைகள் வரை பலதரப்பட்ட 20 பொது இடங்களைப் பொறுத்த வரையில் மக்களின் துப்புரவு மனநிறைவு மாறுபட்டதாக இருக்கிறது.

சிங்கப்பூரர்களும் நிரந்தரவாசிகளும் கலந்துகொண்ட அந்த ஆய்வில் 2,000 பேர் கருத்து தெரிவித்தனர். பொது நிகழ்ச்சிகளுக்குப் பிறகு அங்காடி நிலையங்களின் துப்புரவுநிலை அவ்வளவாக சரியில்லை என்று குடியிருப்பாளர்கள் கூறுகிறார்கள்.

பொதுச் சுகாதார மனநிறைவு ஆய்வு சென்ற ஆண்டு பிற்பகுதியிலிருந்து இந்த ஆண்டு மார்ச் வரை நடத்தப்பட்டது.

சிங்கப்பூர் நிர்வாக பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் போலின் டே ஸ்ட்ராகன், சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் கொள்கை ஆய்வுக் கழக மூத்த ஆய்வு பேராசிரியர் டாக்டர் மேத்யூ மேத்யூஸ் ஆகிய இருவரும் தலைமை தாங்கி ஆய்வை நடத்தினர்.

பொதுவாக பொது இடங்களின் துப்புரவைப் பொறுத்தவரை ஆய்வில் கலந்துகொண்டவர்களில் 87% மனநிறைவு தெரிவித்தனர்.

ரயில் நிலையங்களில் அதாவது எம்ஆர்டி மற்றும் இலகு ரயில் நிலையங்களில் சாலைகளில் துப்புரவு மிகவும் நன்றாக இருக்கிறது என்று ஏறக்குறைய எல்லாரும் தெரிவித்தனர். இந்த அளவு முறையே 97% ஆகவும் 95% ஆகவும் இருக்கிறது.

ஆனால் நிகழ்ச்சிகளுக்குப் பிறகு அங்காடி நிலையங்களிலும் பொது இடங்களிலும் துப்புரவுக்கு கிடைத்த புள்ளிகள் முறையே 60% மற்றும் 59% ஆக உள்ளது என்று ஆய்வு தெரிவித்துள்ளது.




பொதுச் சுகாதார மனநிறைவு ஆய்வு சென்ற ஆண்டு பிற்பகுதி முதல் இந்த ஆண்டு மார்ச் வரை நடத்தப்பட்டது. அதில் 2,000 சிங்கப்பூரர்களும் நிரந்தரவாசிகளும் கருத்து தெரிவித்தனர். **படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.